# <u>பின் தொடர்தல் பாடங்கள்</u>

## <u>பாடம் # 1 ஜெபம் - தேவனிடம் பேசுவது</u>

***ஜெபம் மற்றும் உபவாசத்தின் முக்கியத்துவம்***

***யாக்கோபு* 4: 8** *தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.தேவன் நாம் அவரிடத்தில் நெருங்கி வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஜெபம் என்பது தேவனிடத்தில் பேசுவதும், நீங்கள் அவரை நேசிக்கிறீர்கள் என்று அவரிடம் சொல்வதாகும். பெரிய மற்றும் சிறிய விஷயங்களைப் பற்றி தேவனுடன் உரையாடுவதற்கும், அவர் செவிசாய்க்கிறார் என்பதில் உறுதியாக இருப்பதற்கும் இது ஒரு வாய்ப்பாகும். ஜெபம் என்பது மற்றவர்களுடன் நாம் செய்வது போலவே, தேவனுடனான நமது உறவை வளர்ப்பதற்கான ஒரு செயல்முறையாகும்.*

***மாற்கு* 1:35** *இயேசு, அதிக வேலைகள் இருந்தும், ஜெபிக்க நேரத்தைக் ஒதுக்குகிறார். கவனச்சிதறல் இல்லாத ஒரு இடத்தையும் நேரத்தையும் அவர் கண்டறிகிறார்.*

***மத்* 6: 5-8** *ஒரு தனிமையான இடத்தைக் கண்டறியுங்கள்.மனிதர்களை பிரியப்படுத்துவதற்கு எதையும் செய்ய வேண்டாம். தெளிவாக கேளுங்கள். நாம் அவரிடம் கேட்பதற்கு முன்பு நமக்கு என்ன தேவை என்பதை தேவன் அறிவார், ஆனாலும் நாம் கேட்க வேண்டும்! உளற வேண்டாம், நண்பரைப் போல தேவனிடத்தில் பேச வேண்டும்.*

***மத்* 6: 16-17** *ஜெபத்தைப் போலவே உபவாசமும் இயேசு எதிர்பார்த்த ஒன்று.*
*இவ்வசனங்களை காண்க*
**நெகேமியா 1: 4, *ஏசா* 58, யோவேல் 2:12**.

***யாக்கோபு* 5: 13-18** *நீங்கள் துன்பப்பட்டால் ஜெபியுங்கள் (வச .13). நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால், தேவனைத் துதியுங்கள் (வச .13). நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால், உங்களுக்காக ஜெபிக்க ஆத்மீகமானவர்களிடத்தில் உதவி பெறுங்கள் (வச .14-15). நீங்கள் பாவத்தில் இருந்தால், அதை அறிக்கையிட்டு ஜெபம் செய்யுங்கள் (வச. 1 6).எலியா ஒரு சாதாரண மனிதர் - ஆனால் ஜெபித்ததால் அவர் அசாதாரணமான காரியங்களைச் செய்தார் (வச. 16 - 18).*

***ஜெபத்தில் வாஞ்சை.***

***சங்கீதம்* 42: 1-2** *சங்கீதக்காரன் கடவுளுக்காக தாகம் அடைந்தார்.* ***சங்கீதம்* 63: 1-2** *சங்கீதக்காரன் தேவனை ஆவலுடன் தேடினார்.*
**லூக்கா 6:12** *இயேசு இரவு முழுவதும் ஜெபம் செய்தார்!*
**எபிரெயர் 5: 7** *இயேசு "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்" ஜெபித்தார்.*

***கற்றுக்கொள்வதின் முறை***

**லூக்கா 11: 1-13** *ஜெபம் இயல்பானதல்ல. சீஷர்களுக்கு கூட கற்பிக்க வேண்டியிருந்தது. இந்த ஜெபத்தில் இயேசு ஒரு அமைப்பை பயன்படுத்தினார்*

*நாம் பின்பற்றக்கூடிய ஒரு பயனுள்ள யோசனை*

**துதித்தல் :-** *வசனம் 2- அவர் தேவனை துதிப்பதை நாம் காண்கிறோம்.*

***பாவஅறிக்கை*** *- 4 வது வசனத்தில் அவர் மன்னிப்பு கேட்கிறார்.*

**நன்றி செலுத்துதல் -** *இந்த ஜெபம் அதைக் காட்டாது; ஆனால் தானியேல் ஒரு நாளைக்கு 3 முறை நன்றி சொல்கிறார்* **( 6: 10)**.

***சங்* 105: 1** , *"கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்" என்று சொல்கிறது.*

**வேண்டு***தல் செய்வது என்றால் விண்ணப்பம் செலுத்துவது. லூக்கா 11: 2-ல் அவர் தம்முடைய இராஜ்யம் வருவதாக என தேவனிடம் கேட்கிறார்;*

*3 வது வசனத்தில் அவர் தனது அன்றாட அப்பத்தை தேவனிடம் கேட்கிறார்.*

**கொலோ 4: 2-4** *நாம் ஜெபத்திற்காக நம்மை அர்ப்பணித்து, கவனமாகவும் நன்றியுடனும் இருக்க வேண்டும். திறம்பட பிரசங்கிக்க கதவுகள் திறக்கப்பட ஜெபிக்க வேண்டும் என்று அவர்கள் ஜெபிக்க வேண்டுமென பவுல்*

*விரும்பினார். நீங்கள் அர்ப்பணிப்புடன், மற்றவர்களின் தேவைகளில் கவனம் செலுத்தினால் திறம்பட ஜெபிக்க கற்றுக்கொள்வீர்கள்.*

***நம் ஜெபத்தில் உள்ள சிக்கல்கள்***

**1 பேதுரு 4: 7 - *கவனக்குறைவு*** *நம்முடைய ஜெபங்களை பாதிக்கும். நீங்கள் சத்தமாக ஜெபிக்க விரும்பலாம்.*
***சங்கீதம்* 66:18** *தனிப்பட்ட நீதியின் குறைபாடு ஜெபத்தை பயனற்றதாக ஆக்குகிறது.* தேவன் தேவபக்தியுள்ள மனிதர்களின் ஜெபத்தைக் கேட்கிறார் (யோவான் 9:31).
***லூக்கா* 18: 1-8** *விடாமுயற்சியின் குறைவு* - *இந்த விதவையின் விடாமுயற்சியினால் நியாயமற்ற நீதிபதியும் இறுதியில் செவிகொடுத்தார்.*
*நமக்கு செவி ஐயோகொடுக்க தேவன் ஆர்வமாக உள்ளார்* (மத் 7:11).
**1 யோவான் 5:14** தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்கும் ஜெபத்திற்கு பதில் அளிக்கப்படுகிறது.
**யோவான் 14: 13-14** இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்க வேண்டும் என்கிறது.
***மாற்கு* 11:24** விசுவாசமின்மை நம் ஜெபங்களைத் தடுக்கலாம்.
***யாக்கோபு* 1: 6-8** நாம் "விசுவாசிக்க வேண்டும், சந்தேகிக்கக்கூடாது" என்று கூறுகிறது.

***செயல்முறைகள்*:-**

***எபே* 6:18** *எல்லா நேரங்களிலும் எல்லா வகையான ஜெபங்களுடனும் விண்ணப்பங்களுடனும் ஆவியினால் ஜெபியுங்கள்!*
***பிலி* 4: 6-7 *எல்லாவற்றையுங்குறித்து... உங்கள் விண்ணப்பங்களை வேண்டுதலினால் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்*"** *உங்களின் உங்களின் சுமைகளையும் கனவுகளையும் ஜெபிக்கும் பட்டியலாக எழுதுங்கள்.*
**1 பேதுரு 5: 7** *அவர் உங்களையும் என்னையும் கவனித்துக்கொள்கிறார்.*
*ஒவ்வொரு முறையும் நீங்கள் ஜெபிக்கும்போது தேவனுடைய கரங்களில் உங்களின் சுமைகளை ஒப்படைக்க மறக்காதீர்கள்.*
***எரேமியா* 30: 21** *தம்மை நெருங்குவதற்காக தம்மிடம் அர்ப்பணிக்கும் நபர்களைத் தேவன் தேடுகிறார். நீங்கள் தயாரா?*

***சங்கீதம்* 5: 3** தினமும் ஜெபியுங்கள் - ஜெபிக்க ஒரு நேரத்தையம், எவ்வளவு நேரம் மற்றும் எங்கே ஜெபம் செய்ய வேண்டும் என்று திட்டமிடுங்கள்..
**1 தெச 5:17** *நாள் மற்றும் வாரம் முழுவதும் இடைவிடாது தொடர்ந்து ஜெபியுங்கள்.*
**நெகேமியா** 2: 4 *ல் ராஜாவுடன் பேசும்போது* நெகேமியா செய்ததைப் போல, நீங்களும் ஒருவரிடம் பேசவிருக்கும்போது உங்கள் இதயத்திலிருந்து ஒரு சிறிய ஜெபம் செய்யலாம்.

# பாடம் # 2 வேதவாசிப்பு தேவனுக்கு செவிசாய்ப்பது

*இளம் கிறிஸ்தவர்களுக்கு தொடர்ச்சியான மற்றும் பயனுள்ள வேதவாசிப்பில் வேரூன்றி இருப்பதே கிறிஸ்துவுக்குள் அவர்களை வழிநடத்துபவர்களின் முக்கியமான ஒன்றாகும்.சாத்தானுக்கும் அவருடைய திட்டங்களுக்கும் எதிராக நம்முடைய நிலைப்பாட்டை "ஆவியின் பட்டயத்தை" பயன்படுத்திக்கொண்டு,* (எபே 6:18). *என்கிற வசனத்தின் வழியில் மட்டுமே முயற்சிக்க முடியும். ஆவியில் தனித்து நின்று வளராமல், கிறிஸ்துவில் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பெரேயர்களுக்கு இருந்த ஆவியை அடைந்து (அப்போஸ்தலர்* 17: 10-12), *வேதம் என்ன கற்பிக்கிறது என்பதைத் தாங்களே புரிந்து கொள்ள விரும்பினர், சொந்த மனவுருதியை அடைந்தனர். அந்த கவனத்தை நாமும் செலுத்துவோம்*

***அறிமுகம்***

***மத் 4: 4*** *"ஒவ்வொரு வார்த்தையும்." உண்மையான அப்பத்துடன் ஒப்பிடத்தக்கது, தேவையுள்ளது. தேவனுடைய வார்த்தையில் நீங்கள் நிற்கவில்லை என்றால், நீங்கள் விசுவாசத்தில் நிலைக்க மாட்டீர்கள்.*

***மத் 24:35*** *இயேசுவின் வார்த்தைகள் ஒருபோதும்* ***ஒழியாது*** *என்று கூறுகிறது.*

***யோசுவா 1: 8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக;*** *அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; இதையும் படிக்கவும்* ***சங் 1: 2-3***.

***எஸ்றா 7:10 கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்.*** *அவரைப் போல இருப்போம்!*

***ஏசாயா 66: 2*** *அவருடைய வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன் என்கிறார்.*

***உங்களின் வேதவாசிப்பில் அதிக கவனம் செலுத்துங்கள்***

**2 பேதுரு 3: 15-16** *வேதவாக்கியங்களைப் புரட்ட வாய்ப்பு உண்டு.*

*தங்களுக்குக் கேடுவரத்தக்கதாகவும்(வச .16). சில வசனங்களைப் புரிந்துகொள்வது கடினம் (வ .16), ஆனால் சாத்தியமற்றது அல்ல (2 கொரி 1:13). முதலில் அவற்றை நீங்களே புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். ஆனால் உங்களுக்கு புரியவில்லை என்றால் தேவன் மற்றும் மற்ற சீஷர்களிடமிருந்து உதவி கேளுங்கள்.*

**2 தீமோ 2:15 தேர்ச்சி பெற்ற வேலைக்காரனாக ஆகுங்கள்.**

(2 *தீமோ* 3:17). *வெட்கப்படாதீர்கள், வேதம் கற்று கொடுக்க கற்றுக்கொள்ளுங்கள்*

**1 பேதுரு 3:15** *சுவிசேஷத்திற்கு ஆயத்தமாக இருங்கள். இதற்கு வேதாகமத்தின் அறிவை விட, மக்களின் கேள்விகளுக்கு மரியாதையோடும் மற்றும் தயவோடும் பதிலளிப்பதை உள்ளடக்குகிறது.*

***சங்* 119: 9-11 வேத***வார்த்தையின்படி வாழ்வதன் மூலம் நாம் தூய்மையாக இருக்க முடியும். தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களில் வைத்து வைப்பதன் மூலம் பாவத்திலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். 119-ஆம் சங்கீதத்தை நீங்கள் முழுவதும் படித்தால், சங்கீதக்காரன் தேவனுடைய வார்த்தையை நேசிப்பதைக் காணலாம்.*

***யாக்கோபு* 1: 22-25** *நம்முடைய சொந்த வாழ்க்கையில் நடைமுறையில் செயல்படுத்தாமல் வேதத்தைப் படிப்பது பயனற்றது.*

***ஊக்கம் அடையுங்கள்!***

**ரோமர் 15: 4** *வேதவசனங்களின் உற்சாகம் நமக்கு நம்பிக்கையைத் தருகிறது!*

**1 கொரி 10:11** *பழைய ஏற்பாட்டின் கதைகள் நமக்குக் கற்பிப்பதற்கான எடுத்துக்காட்டுகளாக நடந்திருக்கிறது .*

**கொலோ 3:16** *தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் பேசுங்கள். ஒருவருக்கொருவர் ஒழுங்குபடுத்துவதிலும் உங்கள் வீடுகளிலும் இதைப் பயன்படுத்தவும்.*

**2 தீமோ 2: 7** *தேவனுடைய வார்த்தையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள், தேவன் உங்களுக்கு அர்த்தங்களைத் தருவார்.*

**வேதவாசிப்பின்** ABCDE.

**கேள்விகளைக் கேளுங்கள்:** வேதம் என்ன சொல்கிறது? என்ன எழுதப்பட்டுள்ளது?
யார் பேசுகிறார்கள்? இது யாரைப் பற்றியது? முக்கிய கதாபாத்திரங்கள் யார்? இது யாரிடம் பேசுகிறது?இந்த நிகழ்வுகள் எப்போது நிகழுகிறது/நிகழும்?
ஒரு நபர், மக்கள் அல்லது தேசத்திற்கு எப்போது ஏதாவது நடந்தது /நடக்கும்/?
இது எங்கே நடந்தது / நடக்கும்? இது எங்கே கூறப்பட்டது?அது ஏன் சொல்லப்படுகிறது? இது ஏன் நடக்கும்?இந்த நேரத்தில் ஏன்? இந்த நபர் ஏன்?
அது எப்படி நடந்தது / நடக்கும்? அதை எவ்வாறு செய்வது? அது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

**மனவுறுதியடையுங்கள்:** இது எனக்கு எவ்வாறு பொருந்தும்? மனவுறுதிப்படுத்தும் கருத்துகளை எழுதி அவற்றைப் பற்றி ஜெபிக்கவும்.
**ஒரே சம்பவங்களை ஒப்பிடுக:** சுவிசேஷ புத்தகங்கள் பெரும்பாலும் ஒரேமாதிரியான பாடப்பகுதிகளைக் கொண்டுள்ளன. பழைய ஏற்பாட்டு வரலாற்று புத்தகங்களில் (1 சாமுவேல் முதல் எஸ்தர் வரை) பெரும்பாலும் தீர்க்கதரிசிகள் (ஏசாயா முதல் மல்கியா வரை) அல்லது சங்கீதம் அல்லது மற்ற புத்தகங்கள் (நீதிமொழிகள் முதல் உன்னதப்பாட்டு வரை) பிணைக்கப்பட்டுள்ளன.அவற்றுடன், அப்போஸ்தலர் புத்தகத்தில் காணப்படும் குறிப்பிட்ட நகரங்களை மற்ற புதிய ஏற்பாட்டு கடிதங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது..
அது எப்படி இருந்திருக்கும் என்று கனவு காணுங்கள். நீங்கள் வாசிப்பது குறித்து ஜெபம் செய்யுங்கள். அங்கு இருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

தினமும் படிக்கவும்: தினமும் வேதத்தை வாசிப்பதற்கு நேரத்தை ஒதுக்குங்கள். புதிய ஏற்பாட்டை முதலில் படியுங்கள். அங்குமிங்கும் படிப்பதற்கு முழு புத்தகத்தையும் முடியுங்கள். ஒரு வருடத்தில் வேதாகமம் முழுவதும் படிக்க திட்டமிடுங்கள்.

# பாடம் - 3 விசுவாசம், கிரியைகள் மற்றும் கிருபை சமநிலை

இன்று சபைகளில் உள்ள ஒரு பெரிய பரிதாபம் என்னவென்றால், புதிய கிறிஸ்தவர்கள் தங்களைச் சார்ந்து இருக்க கற்பிக்கப்படுகிறார்கள், கிரியைகளால் இரட்சிப்பின் பாதையை அடைய எதிர்த்துப் போராடுகிறார்கள். அவர் / அவள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு, வேதாகமும் படிக்கும்பொழுதே இந்த எண்ணம் உருவாக்கப்பட்டிருக்கலாம். ஆனால் பெரும்பாலும் இது ஒரு பெறப்பட்ட குறைபாடாகும், இது "மூத்த" சீஷர்களைக் கவனிப்பதன் மூலம் கற்றுக்கொள்ளப்படுகிறது. அத்தகைய நிலை சிலுவையின் வேலையை தவிர்க்கிறது. எவ்வாறாயினும், கிருபையைப் பற்றிய உண்மையான புரிந்துகொள்ளுதல் பெற்றதில் பெருமிதமான சிந்தனை கிடைத்தும், அது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மந்தமான அர்ப்பணிப்பை ஊக்குவிக்கவிக்கிறது, இது சோகமான ஒன்று. ஆகவே நாம் சமநிலையை அடைய வேண்டும்-எனவே இந்த பாடம்.

***விசுவாசம்***

***எபிரெயர் 11:6 தேவனை பிரியப்படுத்த விசுவாசம் தேவை? ஆனால் விசுவாசம் என்றால் என்ன?***
***யாக்கோபு 2:14-17 அறிவுபூர்வமான நம்பிக்கையை காட்டிலும் மேலானது விசுவாசம். விசுவாசம் கிரியைகளை காண்பிக்கும். கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாய் இருக்கிறது.***
***கலாத்தியர் 5:6 விருத்தசேதனம் என்கிற பாரம்பரியம் உதவாது. அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்.***

***கிரியைகள்***

***எபேசியர் 2: 8-10*** நம்முடைய சொந்த முயற்சியால் நாம் இரட்சிக்கப்படவில்லை என்று வேதம் தெளிவாகக் கற்பிக்கிறது. ஆனால் அதற்க்கு அர்த்தம் தேவன் நம்மிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை என்று அர்த்தமல்ல.
. இரட்சிப்பு என்பது சம்பாதிக்காத பரிசு, ஆனால் அது கீழ்ப்படிதலுக்கு என்கிற நிபந்தனைக்குட்பட்டது. நம்முடைய வேலைகளில் நாம் செய்ய வேண்டியவைகள் உள்ளன - படிக்க அல்லது செயல்படுத்த வேண்டிய வேலை, செய்ய வேண்டிய பொருட்கள், பதிலளிக்க அல்லது செய்ய வேண்டிய அழைப்புகள், பதிலளிக்க வேண்டிய மின்னஞ்சல்கள் போன்றவை. அதேபோல், நாம் பெற்ற கிருபைக்கு நன்றி செலுத்தும் வகையில் நாம் செய்யும்படி தேவன் நமக்கு நற்கிரியைகளை ஆயத்தம் செய்துள்ளார்.
.

***2 இராஜாக்கள் 5:1-15 நாகமான் என்பவருக்கு குஷ்டம் இருந்தது. அவனுக்கு உதவி தேவைப்பட்டது. ஆனால் அவன் வழியில் செய்ய நினைத்தான் (வ .12) முடிவில் அவன் கீழ்படிந்து குணமடையும் ஈவை பெற்றான், ஏழு முறை ஆற்றில் ஸ்நானம் பண்ணியதால் அவன் குணமடையவில்லை. ஆனால் அவனுடைய கீழ்ப்படிதலே தேவனுடைய பரிசை பெறுவதற்கு அவரைத் தகுதியடைய செய்தது.***

***கிருபை***

***தீத்து 3: 5*** நாம் நம்முடைய நீதியுள்ள செயல்களால் இரட்சிக்கப்படவில்லை,மாறாக அவருடைய கிருபையால் இரட்சிக்கப்பட்டோம். கிருபை என்பது
தகுதியற்ற தயவு அல்லது இரக்கம்.
கிருபை = ***கிறிஸ்துவின் விலையில் தேவனின் ஐஸ்வர்யம்.***
***யூதா 4*** நாம் கிருபையை சம்பாதிக்கவில்லை அல்லது கிருபைக்குத் தகுதியற்றவர்கள் என்பது பாவம் செய்வதற்கான உரிமம் கிடையாது.

**1 கொரி 15:10** தேவனின் கிருபை நம்மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தேவைனுக்காக நன்றியுடன் உழைக்க வேண்டும்.
***தீத்து 2: 11-14*** கிருபையினாலேயே நாம் சுய கட்டுப்பாடு , நேர்மையான மற்றும் ஆன்மீகமான வாழ்க்கையை வாழ முயற்சி செய்கிறோம்.
***செயல்முறைகள்***

***ரோமர் 5: 6-8*** நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். தேவனுடைய கிருபையால் நமக்கு இரட்சிப்பின் நம்பிக்கை கிடைத்தது என்பதை

*நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் பாவிகளாக இருந்தபோது தேவன் தம்முடைய கிருபையைக் காட்டினார்.*

***மத்தேயு* 7: 1-2 *கிருபையானது,*** *மற்றவர்களை நியாயந்தீர்ப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும் என உணர்த்தும்.*

***ரோமர்* 14:1** *விசுவாசத்தில் பலவீனமானவர்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.* ***லூக்கா* 11: 1-4** *நமக்கு கிருபை இருந்தால், நமக்கு எதிராக பாவம் செய்யும் அனைவரையும் மன்னிப்போம்* (*மத்* 6:15).

***ரோமர்* 12: 3** *உங்களைப் பற்றி அதிகம் சிந்திக்காமல், உங்களைக் குறித்து. நிதானமாகப் எண்ணுங்கள்.*

## பாடம் - 4 சபையாகிய சரீரத்தின் உறவுமுறை

இரட்சிக்கப்பட்டவர்களின் சமூகத்தில் ஒருவர் நுழையும்போது உறவுமுறைகள் மறுரூபம் ஆகின்றது. நம்முடைய கவனத்தை நம்மீது செலுத்துவதற்கு பதிலாக, "ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்." என்று வசனம் கூறுகிறது (பிலி 2: 3).

ஆயினும், அன்னியோன்யம் மற்றும் கிறிஸ்துவின் சரீரம் என்ற கருத்தை நாம் தக்க வைத்துக் கொள்ளும் வரை, வேதாகமத்தின் கொள்கைகளை செயல்படுத்துவது ஒருபோதும் நடக்காது. சபை என்பது நாம் கலந்து கொள்ள வேண்டிய ஒன்று மட்டுமல்ல; பல தேவைகளை பூர்த்திசெய்வதற்கு ஒரு வாய்ப்பாகும். விசுவாசிகளுக்கு அநேக தேவைகள் உள்ளன!

சுருக்கமாக, இளம் கிறிஸ்தவர்கள் ஒரு செயல்படக்கூடிய மற்றும் நடைமுறைபடுத்தும் வகையில் சபையாகிய சரீரத்தில் ஒட்டப்படாவிட்டால், அவர்கள் பெரும்பாலும் உலகத்தால் இழுக்கப்படுவார்கள். நம்முடைய குடும்ப சபைகளில் அதுதான் நடக்கிறது என்றால், நாம் தோல்வியடைகிறோம் (1 கொரி 3: 12-15). இளம் கிறிஸ்தவர்களை நம்முடைய சபையில் ஒருங்கிணைப்பதற்கான மிக முக்கியமான நேரம் அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற முதல் சில வாரங்கள் மற்றும் நாட்கள் ஆகும்.

**உலகத்தில் இருப்பவர்களிடமிருந்து ஏன் வேறுபடுகிறோம்?**

**யோவான் 13: 34-35** இயேசு நம்மை அன்புசெய்தபடியே நாமும் ஒருவருக்கொருவர் அன்புசெய்யும்படி கட்டளையிடுகிறார். இந்த அன்பின் தரமே கிறிஸ்தவர்களாக நம்மை வேறுபடுத்துகிறது.

**மாற்கு 3: 34-35** நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்தால், நாம் இயேசுவின் சகோதர சகோதரிகளாக இருக்கிறோம். இந்த பொதுவான நோக்கத்தின் காரணமாக, கிறிஸ்தவ உறவுமுறைகள் இரத்த உறவுகளையே மீறுகின்றன.

**அவர்ள் எவ்வாறு வேறுபடுகிறார்கள்?**

**1 பேதுரு 1:22** நம்முடைய அன்பு ஒருவருக்கொருவர் நேர்மையாகவும் இருதயத்திலிருந்தும் இருக்க வேண்டும். இது ஆழமாக இருக்க வேண்டும்!

**1 யோவான் 3:16** இயேசுவே நம்முடைய உதாரணம். மற்றவர்களுக்காக நாம் எவ்வளவு தியாகம் செய்ய தயாராக இருக்கிறோம் என்பதில் நம்முடைய பிறரின் அன்பை அளவிட முடியும்.

**நடைமுறையில் இதன் பொருள் என்ன?**

**1 தெச 5: 12-16** வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு தேவைகள் இருக்கும்.
தலைவர்களுக்கு மரியாதை தேவை (வ.12-13). அனைவருக்கும் சமாதானம் தேவை (வ .13). ஒழுங்கில்லாதவர்களுக்கு எச்சரிக்கை தேவை(வ.14), திடனற்றவர்களுக்குத் தேற்றுதல் தேவை (வ.14), உதவியற்றவர்களுக்கு உதவி தேவை (வ.14), அனைவருக்கும் பொறுமை தேவை (வ.14), யாருக்கும் பழிவாங்குவது தேவையில்லை (வ.15) ). எல்லா நேரத்திலும் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் (வச .16)!

**1 யோவான் 3:17** ஏழைகளுக்கு உதவுங்கள், ஒருவருக்கொருவர் பொருள் சம்மந்தமான தேவைகளை கவனித்துக் கொள்ளுங்கள்.

**கொலோ 1: 28-29** கிறிஸ்துவில் பரிபூரணமான (தேறினவனாக) அவர்களை முன்நிறுத்த பவுல் போராடினார்.

நாம் ஒருவருக்கொருவர் ஆன்மீக வாழ்வைப் பற்றி அக்கறைக்கொள்ள வேண்டும்.

**முடிவு**

**எபே 4: 29-32** நாம் எப்போதும் கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேச வேண்டும்.

**எபே 5:21** கிறிஸ்துவுக்குள் தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

**எபிரெயர் 13: 7,17** ஆட்டு மந்தைகளாகிய நமது ஆத்துமாக்களுக்கு தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய சபையின் தலைவர்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களை பின்பற்ற வேண்டும்.

**மற்ற வேதவசனங்கள்**

**அப்போஸ்தலர் 2: 42-47** ஆரம்பகால சீஷர்கள் தினந்தோறும் ஒன்று கூடி, மகிழ்ச்சியாக இருந்தார்கள், எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டார்கள்!

**அப்போஸ்தலர் 4: 32-35** அதிகமாய் பகிர்ந்தார்கள் மற்றும் மகிழ்ச்சியான அன்னியோன்யம்!

**ரோமர் 12: 5** நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

**1 கொரி 12: 12-27** நாம் ஒரே சரீரம்-ஒவ்வொரு அவயமும் முக்கியமானது. ஒவ்வொரு அவயமும் மற்ற அவயத்தை அக்கறை கொள்ள வேண்டும்.

**எபி 10: 24-25** கூட்டங்களைக் தவறவிடும் பழக்கத்தை நாம் பெறக்கூடாது. நாம் ஒருவருக்கொருவர் ஏவ வேண்டும்!
**எபிரெயர் 13: 1-2** உபசரிப்பு தேவனால் எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் அதனிமித்தம் அற்புதமான ஆசீர்வாதங்களும் கிடைக்கக்கூடும்!
**யாக்கோபு 1: 19-21** நாமனைவரும் பேசுகிறதற்குப் பொறுமையாயும், கேட்கிறதற்குத் தீவிரமாயும்,, கோபிக்கிறதற்குத் தாமதமாயுமிருக்கக்கடவோம்.
**3 யோவான்: 5** அந்நியர்களுக்கு உதவுவது சரியானது!

**செயல்முறைகள்**
உறவுகளை வளர்ப்பதற்கு மற்ற சீஷர்களுக்கு கைபேசி மூலம் பேசுவது அல்லது கடிதம் எழுதுவது போன்றவற்றைச் செய்யுங்கள். இதில் தனிப்பட்ட இலக்குகளை அமைக்கவும். தினமும் ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள். அடுத்த மாதத்தின் ஒவ்வொரு சபைக் கூட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு புதிய நபருக்கு உங்களை அறிமுகப்படுத்துங்கள். உங்கள் சகோதர சகோதரிகளுக்கு குறிப்புகள், அட்டைகள், எஸ்எம்எஸ் மற்றும் மின்னஞ்சல்களை எழுதுங்கள். அவர்களை ஊக்குவிக்க சபையின் தலைவர்களுக்கும் எழுதுங்கள்.

# பாடம் - 5 புதிய ஏற்பாட்டின் சபை - மூன்று அம்சங்கள்

*வேதவசனங்கள் நம்முடைய செயல்களை ஆதரிக்க வேண்டும் என்று சீஷர்களாகிய நாம் எதிர்பார்க்கிறோம் மற்றும் சபையாக நம்முடைய நடைமுறைகள் வேதத்தின் போதனையின்படி கட்டப்பட வேண்டும். இந்த பாடத்தில், புதிய ஏற்பாட்டு போதனைகளில் மற்றும் நடைமுறைகளில் ஆழமாக வேரூன்றியிருக்கும் நம்முடைய சபையின் அம்சங்களாகிய நற்கருணை , காணிக்கை மற்றும் பாவஅறிக்கை ஆகிய 3 அம்சங்களை நாம் கருதுகிறோம் .*

***நற்கருணை (கர்த்தரின் கடைசி பந்தி, நற்கருணை)***

***மத் 26: 26-29 நற்கருணை என்பது*** *பஸ்கா இரவு பந்தியாக (யூதர்களின் பின்னணி) உருவானது.அப்பம் கிறிஸ்துவின் சரீரமாகும், திராட்சை ரசம் கிறிஸ்துவின் இரத்தமாகும்.*

***1 கொரி 11: 23-29*** *கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு ஏற்படுத்தினார். இது அவர் வரும் வரை அவருடைய மரணத்தை அதிகாரபூர்வமாக அறிவிப்பதாகும். அதில் பங்குபெறுவதற்கு முன்பு நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும்.*
***அப்போஸ்தலர் 20: 7 அப்பம் பிட்கும்படி*** *கிறிஸ்துவர்கள் ஒன்றாக கூடினார்கள்.புதிய ஏற்பாட்டின் ஆதாரங்களிலிருந்தும், ஆரம்பகால சபையின் வரலாற்றிலிருந்தும் சீஷர்கள் குறைந்தது வாரந்தோறும் அப்பத்தை பிட்டார்கள் என்று தெரிகிறது.*

***மற்ற வசனங்கள்:***
***யாத்திராகமம் 12, மாற்கு 14: 12-26, லூக்கா 22: 7-20, யோவான் 6: 48-58, அப்போஸ்தலர் 2:42.***

***காணிக்கை (சபையின் தேவைகளுக்காக)***
***மத் 6:21*** *உங்கள் பொக்கிஷம் இருக்கும் இடத்தில் உங்கள் இருதயம் இருக்கும்.*
***மத் 6:24*** *நீங்கள் தேவனுக்கும் பணத்திற்கும் ஊழியம் செய்ய முடியாது, எனவே தேவனுக்கு முதலிடம் கொடுங்கள்.*
***நீதி 3: 9-10*** *உங்கள் பணத்தால் தேவனை கனம் செய்கிறீர்களா? உங்கள் வருமானத்தின் "முதற் கனிகளை " அவருக்குக் கொடுங்கள். பழைய ஏற்பாட்டில் அவர்கள் 10% கொடுத்தார்கள். இயேசு 100% எதிர்பார்க்கிறார் (லூக்கா 14:33), நாம் வாழ்வதற்குத் தேவையானதை நம்மிடம் வைத்திருக்கிறார்.*
***1கொரி 16: 1-2*** *காணிக்கை வசூலிப்பது வேதத்தின்படி உண்டானதாகும். நாம் முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.*
***1 திமோ 5: 17-18*** *ஊழியர்களுக்கு ஊதியம் கொடுப்பது வேதம் எதிர்பார்க்கும் ஒன்று. போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், இயேசு கூறியிருக்கிறார். (லூக்கா 10: 7).*
***2 கொரி 8: 1-15*** *மக்கதோனியர்கள் தியாகமுள்ளவர்களும் மற்றவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகவும் இருந்தார்கள்.(வ.1-4). தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்.(வச. 7). நாம் ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் இயேசு தரித்திரரானார்.(வச .9) அவர் நம்முடைய உதாரணம்..*
***2 கொரி 9: 6*** *நாம் விதைத்ததை அறுவடை செய்கிறோம்.*

***மற்ற வசனங்கள்:***
***யாத்திராகமம் 36: 6-7, மாற்கு 12: 41-44, லூக்கா 6:38, 1 தீமோ 6: 5-10, 17***

***பாவ அறிக்கை***

***யாக்கோபு 5:16*** *அவர்கள் தங்கள் பாவங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு குணமடைய ஜெபிக்க வேண்டும் . நாம் அனைவரும் பாவிகள். நாம் அனைவருக்கும் உதவி தேவை.*
***1யோவான் 1: 5-10*** *தேவன் ஒளியாய் இருக்கிறார். நாம் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். வெளிச்சத்தில் நடப்பது என்பது பாவமற்ற வாழ்க்கை அல்ல, மாறாக நம்முடைய பாவத்தைப் பற்றி வெளிப்படையாக இருப்பதுதான்!*
***நீதி 28: 13-14***
*நாம் நம் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறோமானால் இரக்கம் பெறுவோம். நம்முடைய இருதயங்கள் மென்மையாக இருக்கும்.*

# பாடம் - 6 வழிநடத்தப்படுதல் தேவனுடைய திட்டம்

வழிநடத்தும் முறைகள் பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்த்தவர்களின் வாஸ்க்கையை வழிநடத்த போதிக்கிறது என்பதில் எந்த கருத்து வேறுபாடுகளும் இல்லை. ஞானஸ்நானத்திற்கு முன்பே ஒருவர் தன் வாழ்நாள் முழுவதும் வழிநடத்தப்படுவார் என்பதை போதிக்க வேண்டும். இந்த பாடம் வழிநடத்துதல் பற்றி ஒரு சிறந்த மனப்பான்மையை இளம் கிறிஸ்தவருக்கு போதிக்கும்படியாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் தன் வாழ்க்கையில் கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டபின் தான் விசுவாசத்தில் வளருவதற்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். வழிநடத்துதல் மனிதருடைய கட்டளையல்ல தேவனுடைய கட்டளையாக இருக்கிறது (மத்தேயு 28:19)

**வழிநடத்தப்படுதல் :**

2 திமோ 2:2 வழிநடத்தப்படுதல் ஒரு தொடர்ச்சியான செயல்முறை

கொலோ 1:28-2:1 வழிநடத்தப்படுதலின் குறிக்கோள் - முதிர்ச்சி, பரிபூரணமடைதல், முழுமை பெறுதல். வழிநடத்தும் உறவுகள் கடனமானதுதான் ஆனாலும் அன்பின் நிமித்தமே சவால்கள் கொடுக்கப்படுகின்றது. வழிநடத்தப்படுதல் ஒரு கடினமான பொறுப்பு.

1 கொரி 11:1 வழிநடத்துநரின் உதாரணத்தை பின்பற்றுங்கள். அவர்கள் பரிபூரணம் அடைந்தவர்கள் அல்ல. ஆகவே அவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல நீங்களும் பின்பற்றுங்கள்.

நீதி 10:17 திருத்தப்படுதலை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். தவறான மனப்பான்மை கொண்டிருந்தால் மற்றவர்களையும் தவறான வழியில் அழைத்து செல்ல காரணமாய் இருப்பீர்கள்.

**ஆலோசனை கேளுங்கள் - நீதி 11:14**

நீதி 15:12 சவால்களை ஏற்றுக்கொண்டு வழிநடத்துனருடன் நெருங்கிய உறவை வளர்த்துக்கொள்ளுங்கள்

லூக்கா 6:39-40 உங்கள் போதகரை போல மாறுவது உங்கள் வாழ்க்கையிலும் குளங்களிலும் கற்றுக்கொள்வதே நோக்கம்

**உங்களை நீங்களே வழிநடத்துவது:**

எபிரேயர் 5:11 கற்றுக்கொள்வதில் ஆர்வமாக இருங்கள், உங்களை நீங்களே வழிநடத்துங்கள். இறுதியாக உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நீங்களே பொறுப்பு. மற்றவர்களை குற்றம் சாட்ட இயலாது.

**நடைமுறை ஆலோசனைகள் :**

1. ஒவ்வொரு வாரமும் உங்கள் வழிநடத்துநரை சந்திக்க நேரம் ஒதுக்குங்கள்
2. அன்றாடம் சந்திக்க அல்லது தொடர்பு கொள்ள முயற்ச்சி செய்யுங்கள்
3. ஒன்றாக சேர்ந்து விளையாட்டு நேரங்களில் கலந்துகொள்ளுங்கள்

# பாடம் - 7 தடை - நம் இருதயம்

*நம் இருதயம் நம்மை வழிநடுத்தும் மையம் எனவும், அது மனிதனின் அறிவு, சரீர, உணர்ச்சிப்பூர்வ, ஆத்மீக கட்டுப்பாடுகளைத் தன்னிடம் கொண்டது எனவும் வேதாகமம் கூறுகிறது. ஆக ஒரு மனிதனின் இருதயமே அவனது சிந்தனைகள் மற்றும் செயல்களுக்கும் வழிவகுத்து அவனை உருவாக்குகிறது. இளம் கிறிஸ்தவர்கள் தங்கள் இருதயத்தைக் காத்துக்கொள்ளவும் மென்மையாக வைத்துக்கொள்ளவும், வெளிப்படையாக இருக்கவும் போதிப்பது மிகவும் அவசியம்.*

***அறிமுகம்*** : 1 சாமுவேல் 16:7 தேவன் இருதயத்தை பார்க்கிறார்

***இருதயத்தின் பிரச்சனைகள்***

***வஞ்சனையுள்ளது***
*எரேமியா 17:9 நம்முடைய உணர்ச்சிகளும் மனவோட்டங்களும் வஞ்சிப்பதாக, நம்மை ஏமாற்றக்கூடியதாக இருக்கிறது. உண்மையை அறிந்து மேன்மையானவைகளை நாடாதபடி உணர்ச்சிகள் நம்மை மூடி மறைக்கிறது.*

***பாவம் நிறைந்தது***
*மாற்கு 7:21 இருதயமே எல்லா தீய இச்சைகளுக்கும் ஊற்றாகவும், பாவங்களுக்கு காரணமாகவும் இருக்கிறது*

***கடினமாகுதல்***
*எபி 3:12-13 இருதயம் கடினமாகி, சந்தேகமுள்ளதாக மாறி தேவனை விட்டுவிலகி நம்மை பிரிக்கக்கூடும்*

***தீர்வு***
*எரேமியா 29:13 நம்முடைய முழு இதயத்தோடும் தேவனை தேட வேண்டும்,*

*சங்கீதம் 51:17 தேவனுடைய வார்த்தைகளை பிரதிபலிக்கும் படியான நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமாக இருதயத்தை மாற்றிக்கொள்ளுங்கள்*

*சங்கீதம் 119:11 தேவனுடைய வார்த்தைகளை இருதயத்தில் நிறைத்து வைத்துக் கொள்ளுங்கள்*

*நீதி 4:23 எல்லாவற்றுக்கும் மேலாக இதயத்தை எல்லா காவலோடும் காத்துக்கொள்ளுங்கள், அது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் ஊற்று*

***வாசிக்க வேண்டிய வேதவாக்கியங்கள்***
*ஆதி 6:5, நீதி 28:26, 2 நாளா 16:9, எசே 18:31, சங்கீதம் 51:10, 1 யோவான் 3:20, நீதி 14:12*

***நடைமுறை ஆலோசனைகள்***

1. *பரிசுத்தமான இருதயத்திர்காக ஜெபியுங்கள்*
2. *பாவங்களை அறிக்கையிட்டு தாழ்மையாக இருங்கள்*
3. *உங்கள் வாழ்க்கைக்குரியவைகளை பற்றி வேதாகமம் கூறும் வசனங்களை இருதயத்தில் எழுதிவையுங்கள்*

# பாடம் - 8 சோம்பேறித்தனம், உபயோகமின்மை மற்றும் ஒழுக்கம்

நாம் எப்படி இருக்க வேண்டும் என்றும், தேவன் நம்மை எவ்வாறு பயன்படுத்த போகிறார் என்றும் நம்மில் எத்தனை பேர் கனவு கண்டிருக்கிறோம் ? . நடைமுறையில் ஏற்படும் சாதாரண பலனைக் குறித்து வருத்தப்பட்டு முன்னேறி செல்லாமல் இருக்கிறோம். நம்மில் வெகு சிலர் இயற்கையாகவே ஒழுக்கமாக இருந்தாலும் அதைப் பற்றி கற்றுக்கொள்ள வேண்டியது மிக அவசியம். ஒரு வேளை, நாம் ஒழுக்கமில்லாத நிலையிலிருந்தால் எப்படி உலகளவில் சுவிசேஷத்தை கொண்டுசெல்ல முடியும்? ஒழுக்கம் கடினமானதாக இருந்தாலும் அதை விரைவில் கற்றுக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

**முன்னுரை:**

1 தீமோத்தேயு 4:8

'சரீரமுயற்சி அற்பபிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. '

**சோம்பேறித்தனம்**

எபிரேயர் 6:11 அசதியாயிராதேயுங்கள். இளைஞரோ முதியவரோ ஒவ்வொரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையிலும் சோம்பேறித்தனம் ஒரு அபாயக்குறி.

பொறுமையோடும், விசுவாசத்தோடும் ,ஆற்றும் ஒழுக்கத்தோடும் இருப்பவர்களை பின்பற்றுங்கள். நல்ல உதாரணமுள்ளவர்களை பின்பற்றுங்கள் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.

**உபயோகமின்மை**

1 தெச 4:11 சமுதாயத்திலும் சபையிலும் நிலையான அங்கத்தினராக விளங்குகள். கடினமாக உழைப்பவர்கள் மக்களின் நன்மதிப்பை பெறுவார்கள். மற்றவர்களை சார்ந்திருக்க முயலாதிருங்கள். (கடன் வாங்குவது)

2 தெச 3:6 ஒழுக்கமுள்ளள மக்களின் உதாரணத்தை பின்பற்றுங்கள். பாசாங்கு செய்யாமல் இருங்கள்

**ஒழுக்கம்**

எபி 12:11-12 ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு பார்ப்பதற்க்கு இனிமையானவையல்ல ஆனால் அதன் கனிகள் திருப்தியான வாழ்க்கையை தரும்.

**வாசிக்க வேண்டிய வேதவாக்கியங்கள்**

1 கொரி 9:24-27, 2 திமோ 2:4-6, எபி 5:14

# <u>பாடம் -9 சுவிசேஷ ஊழியம் - மனோதைரியம் - சாதூரியம்</u>

*சுவிசேஷ ஊழியம் என்று வரும்போது சில இளம் கிறிஸ்துவர்கள் மட்டுமே மனோதைரியத்துடன், சமயத்திற்கு ஏற்றார்போல் சாதூரியம் உடையவர்களாக காண்கிறோம். மக்களுக்கு ஏதாவது ஒரு காரியம் மிகுதியாக இருக்கும். சில நேரங்களில் புத்தி சாதுரியமாக பேசுவார்கள் ஆனால் தைரியம் என்று வரும்போது அதை இழந்துவிடுவார்கள். சுவிசேஷ ஊழியத்தில் மனோதைரியம் ஜெபத்தினாலும் சாதுரியமாக பேசுதல் பயிற்சியினாலும் வளரும். பெரும்பாலும் இளம் கிறிஸ்தவர்களே சாதுரியமாக பேசுவதில் தவறுசெய்கிறார்கள் அதற்காக தான் இந்த பாடம் உருவாக்கப்பட்டுள்ளது.*

**1. *சுவிசேஷ ஊழியம்***

2 *கொரி* 5:10-21*நாம் எதற்காக செய்கிறோம் என்று தெரிந்திருப்பதாலும் தேவபயம் இருப்பதாலும் மற்றவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கிறோம். நாம் தேவனுடைய தூதுவராக இருப்பதால் தேவன் நமக்கு ஒப்புரவாகுதலின் ஊழியத்தை கொடுத்திருக்கிறார். இது நம்முடைய தேர்வு அல்ல.*

*பிலமோன்* 6 *நம்முடைய விசுவாசத்தை அதிகமாக மற்றவர்களிடத்தில் பரிந்துகொள்வதால் தேவன் மீது சரியான புரிதலும் உயர்வான மதிப்பும் உண்டாகும்.*

*அப்* 8:1-4 *முதலாம் நூற்றாண்டில் தலைவர்கள் மட்டுமல்ல அனைத்து சீஷர்களும் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டார்கள்.*

**2. *மனோதைரியம்***

*ரோமர்* 1:16-17 *சுவிசேஷம் நம்மை இரட்சிக்க வல்லமையுள்ளதால் அதை குறித்து வெட்கப்பட அவசியமில்லை.*

*லூக்கா* 9:23-26 *கிறிஸ்துவை குறித்து நாம் வெட்கப்படுவோமானால் கிறிஸ்து நம்மை குறித்து வெட்கப்படுவார்.*

*அப்* 4:29-31 *மனோதைரியத்திற்காக ஜெபியுங்கள் தேவன் நிச்சயம் பதிலளிப்பார்.*

**3. *சாதூரியம்***

*மத்தேயு* 10:16 *நம்முடைய சுவிசேஷ ஊழியத்தில் புத்தி கூர்மையாகவும், சாத்தூரியமாகவும் இருக்க வேண்டும்.*

***எதிமறையானவைகள்:***

*நீதி* 12:18 *தகாத வார்த்தைகள்*

*நீதி* 25:17 *அடிக்கடி தொடர்பு கொள்ளுதல்*

*நீதி* 27:14 *நம்முடைய வலிமையை வெளிப்படுத்துவது*

***ஆக்க பூர்வமானவைகள்***

1 *கொரி* 9:20-23 *கணக்கு ஒப்புவிப்பது*

*தீத்து* 2:10 *சுவிசேஷத்தை எல்லாருக்கும் கவரக்கூடியதாக அறிவித்தல்*

1 *பேதுரு* 3:15-16 *மரியாதையுடன் நடந்து கொள்ளுதல்*

***வாசிக்கவேண்டிய வேத வாக்கியங்கள்***

*மத்* 7:6, 2 *திமோ* 2:23-26

***நடைமுறை யோசனைகள்***

1. *வாரந்தோறும் நண்பர்களை அழைத்து வர திட்டமிடுதல்*
2. *சுவிசேஷத்தை எல்லாருக்கும் கவரக்கூடியதாக அறிவித்தல்*
3. *மற்றவருடன் சேர்ந்து அறிவித்தல்.*

# பாடம் - 10 புன்னகையுடன் கூடிய சேவை (ஊழியம்)

*இயேசு இந்த உலகத்திற்கு ஒரு ஊழியக்காரராகவே வந்தார் (மாற்கு 10:45). கிறிஸ்து நமக்கு மத்தியஸ்தராக எப்போதும் ஊழியக்காரராகவே இருக்கிறார் (எபி 7:25). நாம் இந்த விஷயத்தில் இயேசு நமக்கு போதித்த தாழ்மையை பின்பற்றுவதில் குறைவுபடாமல், சேவை செய்வது எவ்வளவு தாழ்வான சூழ்நிலையாகயிருந்தாலும் விட்டுக்கொடுக்காமல் செய்யவேண்டும்.*

*மத்தேயு* 20:26 *உயர்வான வழி - ஊழியம் கொள்ளவராமல் செய்யவந்தார்*
*பிலி* 2:2-8 *சுயநலமான நோக்கத்தோடும், மதியீனத்தோடும், அகந்தையோடும் செய்யாதிருங்கள்.*
*இயேசுவின் சுயநலமற்ற உதாரணத்தை பின்பற்றி மற்றவர்களை மேன்மையாக எண்ணி, அவர்களின் தேவைகள் சந்திக்கப்பட்டதா என்று கவனியுங்கள்.*
*லூக்கா* 17:7-10 *நாம் சேவை செய்யும்போது குறைகூறாமல், "செய்ய வேண்டியதை மாத்திரம் செய்தொம்" என்ற மனப்பான்மை கொண்டிருக்க வேண்டும்.*
*பிலி* 2:14 *பிரதிபலனை எதிர்பார்க்கக்கூடாது*
*கொலோசெயர்* 3:23-24 *மனிதருக்காக அல்ல, தேவனுக்காக முழு இருதயத்தோடு ஊழியம் செய்கிறோம் என்று உணருங்கள்.*

***வாசிக்க வேண்டிய வேதவாக்கியங்கள்***
*சங்கீதம்* 100:2, *கலாத்தியர்* 6:2-10, *நீதி* 3:27-28,
*எபேசியர்* 6:7-8, *யோவான்* 13:1-17, *பிலிப்பியர்* 2:4-5

***நடைமுறை யோசனைகள்***
1. *உங்களை கேட்பதற்க்கு முன்பே செய்ய முற்படுங்கள்*
2. *குறிப்பிட்ட பொறுப்பை செய்ய வாய்ப்பு கிடைக்கும்போது பொறுப்போடு செய்யுங்கள்.*
*உதாரணம் : குழந்தைகள் காப்பகம், வரவேற்பு, நற்கருணை தயார்செய்தல், போதித்தல் போன்றவை*

# *பாடம் -11 கல்வி படிப்பு - தடையா அல்லது வாய்ப்பா*

*கிறிஸ்தவ மாணவர்களிடம் தேவன் சிறப்பை நிச்சயமாக எதிர்பார்க்கிறார்: சிறந்த முடிவுகள் இல்லையென்றால், குறைந்தபட்சம் சிறந்த முயற்சி செய்யவேண்டும் . பெரும்பாலும் (ஒழுக்கமற்ற) மாணவர்கள் கிறிஸ்தவர்களாக மாறி, படிப்பில் சிறப்பாக செயல்படாமல், பின்னர் நற்செய்தி அறிவிப்பது அல்லது சபையை ஒரு சாக்காகப் பயன்படுத்துகிறார்கள். "கல்வி" தேவன் கொடுத்த பொறுப்பு என்பதைக் காண மாணவர்களுக்கு நாம் உதவ வேண்டும். படிப்பில் "அசாதாரணமானவைகள் " எதுவும் இல்லை என்று புரிந்து கொள்ள உதவிசெய்ய வேண்டும். விடாமுயற்சி இல்லாமல் மாணவர்கள் தங்களின் குணம் , ஒழுக்கம், நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றில் பெரும் இழப்பை சந்திக்கிறார்கள்.*

**1. தெளிவான கட்டளை**

1 கொரிந்தியர் 7:25

*ஒரு சிறப்பான காரணத்திற்காக கிறிஸ்தவர்களாக இருக்கும்படி தேவன் நம்மை அழைத்தார்! கல்வி மற்றும் சுவிசேஷம் ஆகியவற்றில் தேவனை மகிமைப்படுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது.*

கொலோசெயர் 3:22-23

*மனப்பான்மையை விட அணுகுமுறை முக்கியமானது. கல்வி உங்கள் "ஆவிக்குரிய" வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதியாகும். நிலையான உந்துதல் இருக்க, சுயநலத்திற்காக அல்ல, தேவனுக்காக உழையுங்கள்.*

**2. சுவிசேஷ உதாரணம்**

1 தெச 4:11

*ஒரு நிலையான உதாரணம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது! மற்றவர்களுக்கு உதவக்கூடியவர்களுக்கு வகுப்பு தோழர்கள் ஈர்க்கப்படுவார்கள்.*

*மாற்கு* 7:37

*இயேசுவின் எல்லா சிறப்பையும் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். நீங்கள் எல்லா பகுதிகளிலும் சிறந்து விளங்கினால் குடும்பத்தினரையும் நண்பர்களையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஊழியம் வழியாக கல்வி. கல்விக்காக மாத்திரம் அல்ல.*

**3. வல்லமையாக தயாராகுதல்**

*யாக்கோபு* 1:2-4

*கல்விக்காக விடாமுயற்சியுடன் இருப்பது, ஒழுக்கம், கவனம், நம்பிக்கை போன்ற ஆன்மீக முதிர்ச்சிக்கு வழிவகுக்கிறது.*

***மற்ற வசனங்கள்***

*நீதி* 6:6; 18;9, *பிலி* 2:14-16; 1 *திமோ* 3:7, 4:15-16

**செயல்முறை**

1. *உங்கள் கல்வியில் ஒழுக்கத்தைத் தேடுங்கள்.*
2. *பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், வகுப்பு தோழர்களிடமிருந்து யோசனை பெறுங்கள்.*
3. *ஒவ்வொரு சொற்பொழிவிலும் கலந்து கொள்ளுங்கள். உங்கள் உதாரணத்திற்கு இது முக்கியமானது.*
4. *நல்ல குறிப்புகளை எடுத்து, தவறவிட்ட விரிவுரைகளைப் பெறுங்கள். அதைப் பெற்ற ஒரு நாளுக்குள் வீட்டுப்பாடம் மூலம் சென்று அதை எவ்வாறு செய்து முடிப்பீர்கள் என்று திட்டமிடுங்கள்.*
5. *மனசாட்சிக்காகவும், நடைமுறை காரணங்களுக்காகவும் எல்லா நேரங்களிலும் கவனமாக இருங்கள் ! .*
6. *தேர்வுகளுக்கு முன்பு சரியாக ஓய்வெடுங்கள்*

# பாடம் -12 கிறிஸ்தவ திருமணம்: முப்புரி நூல்

*ஒவ்வொரு பகுதியிலும் மகிழ்ச்சியான, தேவபக்தியுள்ள, நிறைவான வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் தேவனுடைய வார்த்தையும் அவரது வல்லமையும் நமக்கு வழங்குகிறது (2 தீமோத்தேயு 3:17, 2 பேதுரு 1: 3, யோவான் 10:10). திருமணம் மிக முக்கியமானது, திருமணம் சரியாக இல்லை என்றால், கடுமையான ஆன்மீக பிரச்சினைகளும் இருக்கும். ஒழுக்கத்திற்கு, திருமணம் ஒரு முக்கிய பகுதி. உண்மையில், கிறிஸ்தவ திருமணம் என்பது ஒரு அரங்காகும், அதில் சீடர்கள் தங்களைச் சுற்றியுள்ள பல உலக உதாரணங்களை வியத்தகு முறையில் வெளிப்படுத்துவார்கள். ஒரு சிறப்பான திருமணம் மற்றவர்களை இயேசுவிடம் ஈர்க்கிறது!*

***1. தேவனுடைய திட்டம்***

*ஆதி 2:24; நீதி 18:22*
*திருமணம் உங்கள் ஆழ்ந்த தேவைகளை பூர்த்தி செய்கிறது.உங்கள் கணவர் அல்லது மனைவி உங்கள் நெருங்கிய நண்பராக இருக்க வேண்டும்!*

*1 கொரி 7:39 கிறிஸ்தவரை திருமணம் செய்யுங்கள்*

*நீதி 15:22 அறிவுரை கேளுங்கள்*

***2. உலகம் மற்றும் ஆவிக்குரிய திருமணம்***

**அ. தொடர்பு கொள்ளுதல்**
*- ஒன்றாக நேரம் செலவழிப்பது ( சாப்பிடும் பொது, வழிநடத்தப்படும் போது, மற்ற நேரங்கள் )*
*- கவனிப்பது ( சிறப்பாக கணவர்கள்)*
*- உங்கள் உணர்வுகளை வெளிப்படுங்கள் அடக்கி வைக்காதேயுங்கள்*
*- கோபங்ககளை சேர்த்து வைக்க வேண்டாம்*

*கொலோசெயர் 3:13*
*- உங்கள் கால அட்டவணை பற்றி கலந்துரையாடுங்கள். உங்கள் நேரத்தைப்பற்றி கணவன் அல்லது மனைவியிடம் அறிவியுங்கள்.*

*- தொடர்பு கொள்ளுதல் பிரச்சனைகளை கொண்டுவரும் எதிர்பாருங்கள் தவிக்க வேண்டாம்*

***ஆ. சுயநலம்***
*- கடுமையான கணவர்கள்?*
*கொலோசெயர் 3:19 கணவர்கள் தங்கள் மனைவிகளுக்கு சேவை செய்ய வேண்டும்*
*ஆதி 2:24; 1 பேதுரு 3:7 கவனத்துடன் இருப்பது. கணவர்கள் வீட்டு வேலைகளில் தங்கள் பங்கைச் செய்ய வேண்டும், சுத்தம் செய்வது, குழந்தைகளைப் பராமரித்தல்…*

*- முதலாளி / தொல்லையாக இருக்கும் மனைவிகள்.*
*நீதிமொழிகள் 21:19 ,25:24,27:15*
*கொலோசெயர் 3:18 ,1 பேதுரு 3: 5-6 மனைவிகள் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ள வேண்டும்*

*- பெலவீனமான கணவர்கள்*
*கணவன் திருமண உறவில் ஆன்மீகத் தலைவராக இருக்க வேண்டும். எபேசியர் 5: 22-23*

**இ. விருந்தோம்பல்**
*1. வீட்டு வாழ்க்கை ஒருவருக்கொருவர் மட்டுமே மையமாக உள்ளதா, வசதியான, சுயநலமான, தனியார் உலகில் வாழ்க்கை?*
*2. விருந்தோம்பல் என்பது தேவனின் விருப்பம்! (1 பேதுரு 4: 9) உங்கள் வீட்டை மற்றவர்களுக்குத் திறக்கவும்.*
*3. சுவிசேஷத்தில் விருந்தோம்பலைப் பயன்படுத்துங்கள்.*
*4. மனைவியை விட கணவனின் பொறுப்பு இதுதான்! 1 தீமோத்தேயு 3: 4*
*5. ஒரு சுத்தமற்ற வீடு வரவேற்கும் படியாகயில்லை! நீதிமொழிகள் 24: 30-34*

**ஈ. ஆவிக்குரிய வாழ்க்கை**
*1. நாள் முடியும் போது ஆத்மீக விஷயங்களைப் பற்றி பேசுங்கள்.*
*2. வாழ்க்கைத் துணையுடன் தினமும் ஜெபம் செய்யுங்கள்.*

*3. மந்தமான அல்லது சமரசம் இருக்கும்போது ஒருவருக்கொருவர் "பாதுகாக்க" வேண்டாம் அப்போஸ்தலர் 5: 1-11*

*4. அன்பில் உண்மையை பேசுங்கள்! எபேசியர் 4:15*

***உ. காதல்***

*1. ஒருவருக்கொருவர் பிரிந்திருக்க வேண்டாம். 1 கொரிந்தியர் 7: 5*

*2. சிறப்பு தொடுதல்களை நினைவில் கொள்க! (பாராட்டு அட்டைகள், பூக்கள், பரிசுகள், ஆச்சரியங்கள்…)*

***ஊ. சீர்த்திருத்தல்***

*1. நீங்கள் (இருவரும்) சீர்த்திருத்தலுக்கு எடுத்து கொள்ளாமலிருக்கிறீர்களா? சிக்கலான பிரச்சினைகளின் போது ?*

*2. ஒவ்வொரு திருமணத்திற்கும் ஆலோசனை தேவை! அதற்கு மேல் யாரும் இல்லை!*

*3. திருமணங்களுக்கு ஒழுக்கம் தேவை. "நான்கு வழி திறந்த தன்மை": தீர்க்கப்படாத சிக்கல்கள் இருந்தால், கணவன்-மனைவி ஒருவருக்கொருவர் அனுமதியுடன் மற்ற சீடரிடம் பேசலாம். (நேர்மைக்கு நல்ல சோதனை.)*

***செயல்முறை***

*- ஒவ்வொரு நாளும் ஒன்றாக ஜெபியுங்கள்!*
*- உங்கள் விசுவாசத்தை ஒன்றாக பகிர்ந்து கொள்ளுங்கள்.*
*- அமைதியான நேரங்களை அவ்வப்போது பகிரவும்.*
*- சபையில் வேதவகுப்புகளில் ஒன்றாக சேர்ந்து, ஒருவருக்கொருவர் சிறந்ததை எதிர்பார்க்கலாம்!*
*- ஒரு வாரத்தில் தனியாக ஒரு மாலை நேரத்தை ஒன்றாகச் செலவிடுங்கள், ஒருவருக்கொருவர் உங்கள் அன்பைக் காட்டி, உண்மையிலேயே தொடர்பு கொள்ளுங்கள்.*
*- 2 கொரிந்தியர் 13-ஐ வாசித்து விவாதிக்கவும்.*
*- ஒருவருக்காக ஒருவர் உன்னதப்பாடல் பாடுங்கள்! (காதலன் மற்றும் பிரியமானவர்)*
*- நீங்கள் இருவரும் சேர்ந்து ஒரு தம்பதியினருக்கு வேதாகமம் கற்றுத்தர வேண்டும் என்று தினமும் ஜெபியுங்கள்.*
*- அடிக்கடி நேரம் செலவழியுங்கள்*
*- உங்கள் நேர அட்டவணைகளை ஒன்றாக விவாதிக்கவும்.*
*- ஒரு பயணத்தைத் திட்டமிடுங்கள் (குழந்தைகள் இல்லாமல்).*

# பாடம் 13 கிறிஸ்தவ குடும்பம்: பெற்றோர் மற்றும் குழந்தைகள்

*குடும்பம் சமூகத்தின் மிக அடிப்படையான அங்கம். நம்முடைய சமூகத்தின் அவநம்பிக்கையான அவலநிலையைப் புரிந்து கொள்ள ஒரு சராசரி குடும்பத்தில் இருக்கும் அவநம்பிக்கையான சிரமங்களை நீங்கள் கவனிக்க வேண்டும்! குறுகிய கண்ணோட்டம், மோசமான தகவல் தொடர்பு, மனக்கசப்புகளை உருவாக்குதல், ஒழுக்கமற்ற குழந்தைகள் மற்றும் சிதைந்துபோகும் திருமணங்கள் போன்ற உலகில் உள்ள குடும்பங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் - கிறிஸ்துவை மையமாகக் கொண்ட குடும்பமானது, புதிய காற்றின் சுவாசமாகவும் மற்றும் நம்பிக்கையின் கதிராகவும் இருக்கிறது..*

*தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றும் குடும்பமானது, மகிழ்ச்சியான, நல்ல தொடர்புள்ள, அன்பான, அர்ப்பணிப்புள்ள மற்றும் பலனளிக்கும் குடும்பமாக இருக்கிறது. கிறிஸ்தவ திருமணம் என்பது ஆண்களும் பெண்களும் அன்பு செலுத்துவதற்கும் ஒன்றாக வாழ்வதற்கும் தேவனின் ஞனமான திட்டமாக இருப்பதைப் போலவே, கிறிஸ்தவ குடும்பம் சமூகத்தின் அநாவசியத்திற்கும் சுயநலத்திற்கும் கடவுளின் பதிலாக இருக்கிறது. குழந்தைகளின் குணாதிசிய வளர்ச்சிக்கு அளித்த மிக அருமையான பரிசாக, பெற்றோர்கள் மூலமாக குடும்பத்தை தேவன் தேர்ந்தெடுத்தார்.*

**ஆத்மீக கவனம்**

*- கட்டளை சங்கிலி, (கிறிஸ்து-கணவன்-மனைவி-குழந்தைகள்)*
*- நீங்கள் ஒரு சிறந்த குடும்ப வாழ்க்கையை விரும்பினால், உங்களுக்கு வழிநடத்தப்படுதல் தேவை!*
*- சுவிசேஷ ரீதியாக கனிகொடுக்கும் குடும்பமாக இருக்க வேண்டும்*

**குழந்தைகளை வளர்ப்பது**
**- பாதுகாப்பும் மகிழ்ச்சியும்**

*1. நேரம் - உங்கள் முன்னுரிமைகளைகுழந்தைகளுக்காக மாற்றி அமைக்க வேண்டும்*
*2. பாசம் - அது இல்லாமல், அவர்கள் பாதுகாப்பற்றவர்களாகவும், குளிராகவும், பயத்துடனும் , அந்நியர்களிடம் சரியாக நடந்துகொள்ள மாட்டார்கள்.*
*3. ஆத்மீக எடுத்துக்காட்டுகள் (பெற்றோர்). எபேசியர் 6: 4, உபாகமம் 6:7*

**- ஒழுக்கம்**

*1. ஒழுக்கம் என்பது பயிற்சி. அதைக் கொடுக்காதது அன்பற்றது. . நீதிமொழிகள் 23: 13-14*
*2. உற்சாகப்படுத்துதல் அவசியம் கொலோசெயர் 3:21*
*3. தேவன் ஒழுக்கத்தை கட்டளையிடுகிறார். நீதிமொழிகள் 22:15; 29: 15,17,19,21*
*4. கணவர் தலைமை வழிநடத்துநர்*
*5. குழந்தைகள் தேர்ந்தெடுத்து யாரைக் பின்பற்ற வேண்டும் என்பதைத் தேர்வுசெய்யாதபடி, மனைவியும் கணவரும் "விதிகளில்" ஒற்றுமையாக இருக்க வேண்டும்!*
*6. பயிற்சியின் பகுதிகள்: அதிகாரத்திற்கு மரியாதை செலுத்துதல், பேச்சு மற்றும் வெளிப்படையாக இருத்தல், பாசம், பழக்கவழக்கங்கள், மனநிலை போன்றவற்றை போதித்தல் . நீதிமொழிகள் 22: 6*

**பிற முக்கிய விஷயங்கள்**

*- வழக்கமான, நிலையான குடும்ப ஜெபங்கள்*
*- சபைக்கு சரியான நேரத்தில் இருங்கள். கூடுதல் நேரத்தை அனுமதிக்கவும், குறிப்பாக குழந்தைகளை கருத்தில் கொள்ளுங்கள். சீக்கிரம் வரத் திட்டமிடுங்கள்!*
*- குழந்தைகள் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு அவர்களுடன் ஜெபியுங்கள்.*
*- வாராந்திர குடும்ப நேரம்.*
*- உங்களுக்கு கிறிஸ்தவ குழந்தைகள் இருந்தால், பதின்மூன்று அல்லது டீன் ஏஜ் ஊழியத்தில் ஊழியம் செய்யுங்கள். கருக்களை ஏற்றுக் கொள்ளுங்கள் எதிர்க்க வேண்டாம்.*

**செயல்முறைகள்**

*- குழந்தைகளுக்கு செலவுக்கான பணம் மற்றும் சலுகைகளின் எளிய முறையை உருவாக்குங்கள்*
*- முழு குடும்பத்தோடு சுவிசேஷம் அறிவியுங்கள். ஒரு குடும்பமாக மற்ற குடும்பங்களை அணுகவும்.*
*- பயனுள்ள புத்தகங்களை பரிந்துரைக்கும்படி கிறிஸ்தவர்களிடம் கேளுங்கள்*